1982 பிப்ரவரி 1]

திரு. துரை ராமசாமி: தலைவரவர்களே, கதர் உற்பத்தியில் முதலாவதாக இருக்கிற வெள்ளக்கோவில் பகுதியிலும் வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவரவர்களே, 1981–82-ல் 500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக எங்கெங்கு கதர் நெசவாளர்கள் இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயதான ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்துவரும் தனியார் நிறுவனம்.

*வினா எண். 159— திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயதான ஆதரவற்றவர்கட்கு சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்று வாழ்வளித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அது மாதிரியான அமைப்பு அரசுத் துறையில் ஏற்படுத்தும் எண்ணம் உண்டா?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: (அ) ஆம். சென்னை மாநகரில், பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-3-ல் ''நண்பர்கள் விரும்பும் கழகம்'' (Friend in Need Society) என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் 60 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலோ இந்திய ஆண், பெண் இருபாலரையும் பேணி பாதுகாத்துவருகிறது.

(ஆ) இல்லை.

திரு. செ. இராமலிங்கம்: தரைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை வழங்குகிறதா? எந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது? தற்போது இந்த நிறுவனத்தில் எத்தனை பேர்கள் தங்கியிருக்கிறார்கள்.?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு 1910 முதல் ஒவ்வொரு வருஷமும் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் 15,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனத்தில் 24 ஆண்களும், 15 பெண்களும் இருந்து வருகிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தில் இருக்கிற வயோதிகர்கள் ஓய்வு நேரத்தில் ஏதாவது சிறு தொழில் செய்கிறார்களா? அப்படி இல்லை என்றால் சிறு தொழில் செய்ய அவர்களுக்கு அரசு ஏதாவது வசதி செய்து கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அவர்கள் சிறுதொழில் செய்வதற்கான குறிப்பு என்னிடம் இல்லை; விசாரித்து கூறுகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, இப்போது அந்த நிறுவனத்தில் 24 ஆண்களும் 15 பெண்களும் இருப்பதாகத் தெரிவித்தார்கள். திக்கற்ற நிலையிலே வயோதிகர்கள் நாட்டிலே நிறையபேர் இருக்கிற காரணத்தால் அந்த இடங்களை அதிகரிக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு முதியோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டிருப்பதால் ஆதரவற்ற முதியோருக்கு என்று ஒரு இல்லத்தை ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இந்த தனியார் நிறுவனத்திற்கு மத்திய சமூகநல போர்டிலிருந்து உதவி பெற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நாங்கள் எழுதி கேட்கிறோம். மத்திய அரசு அதற்கு நிதி வழங்குவதாக இருந்தால் அதைப்பெற்று, காரியங்கள் செய்ய நாங்கள் முன்வருவோம்.

செம்பியமாதேவியிலுள்ள கோழிப்பண்ணை.

*வினா எண். 160— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டைத் தொகுதி செம்பியமாதேவி ஊரில் உள்ள கோழிப்பண்ணை மூடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மீண்டும் செயல்பட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?